**செய்முறைத் தேர்வுகள் / அவசரம்.**

**விழுப்புரம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**திருவள்ளுவராண்டு 2044 தை 29 ஆம் நாள்**
**ந.க.எண் 9788/அ3/2012, நாள் 11.01.2013**

**பொருள்:** தேர்வு – இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு – மார்ச் 2013 செய்முறைத் தேர்வு வரும் 20.02.2013 முதல் 28.02.2013 வரை நடைபெற உள்ளது தொடர்பாக – உரிய அறிவுரை வழங்குதல் – சார்பு.

**பார்வை:** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண் 153731/பி1/2012, நாள் 06.02.2013

–––––

மார்ச் / ஏப்ரல் 2013ல் நடைபெற உள்ள இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வின் ஒரு பகுதியான செய்முறைத் தேர்வுகள் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் அறிவுரையின்படி விழுப்புரம் கல்வி மாவட்டத்தில் வரும் **20.02.2013 முதல் 28.02.2013** வரை நடைபெற உள்ளது என அனைத்து வகை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

**செய்முறைத் தேர்வு நடத்துதல் தொடர்பாக கீழ்க்காணும் முன்னிலைப் பணிகளை மேற்கொள்ளுமாறு தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

- செய்முறைத் தேர்வுகள் வரும் 20.02.2013 முதல் 28.02.2013க்குள் நடைபெறும் என்பதை 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சுற்றிக்கையின் மூலமாகவும், பள்ளி தகவல் பலகையின் மூலமாகவும் 12.02.2013 மாலைக்குள் தெரிவித்திடுமாறு தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- மாணவர்கள் செய்முறை வகுப்புகளில் கலந்து கொண்டதற்கான செய்முறை பதிவுப் பதிவேட்டினை (Record Note) சம்மந்தப்பட்ட மாணவர்களிடமிருந்து (அறிவியல் ஆசிரியர் மூலம்) பெற்று, தலைமை ஆசிரியர் தமது பொறுப்பில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

- ஒரு சில மாணவர்கள் உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலோ? அல்லது குடும்ப சூழ்நிலை காரணத்தினாலோ? தற்போது ஒரு வார காலமாக பள்ளிக்கு வராமல் இருந்தாலோ? உடனடியாக சக மாணவர்கள் மூலம் அல்லது தொலைபேசி மூலம் அம்மாணவர்களின் பெற்றோர்களுக்கு தகவல் தெரிவித்து, செய்முறைத் தேர்வுக்கு மாணவர் வருகை புரிய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- 10 ஆம் வகுப்பு அறிவியல் பாடம் போதிக்கும் ஆசிரியர்கள் தமது வகுப்பில் பயிலும் அனைத்து மாணவர்களும் செய்முறைப் பாடத்தில் 100% தேர்ச்சி பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- ஒவ்வொரு பள்ளிக்கும் செய்முறைத் தேர்வு நடைபெறும் தேதி பின்னர் தெரிவிக்கப்படும்.

மேலும் செய்முறைத் தேர்வினை சிறப்பாக எவ்வித சிறு புகார்களுக்கும் இடமின்றி நடத்துவது குறித்து அனைத்து வகை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் கூட்டத்தில் விரிவாக அறிவுரை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–த. செங்குட்டுவன்,
மாவட்டக் கல்வி அலுவலர்,
விழுப்புரம்.

**பெறுநர்**
அனைத்து வகை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள்.

**நகல்:** விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.